சார்பு நீதிமன்றம்**,** லூர்
நாள்: 21.01.2026
வா.சா.1 –வளர்மதி W/o முத்துக்கருப்பன்
O.S. No.12/2021
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
குறுக்கு விசாரணை :

என்னுடைய அப்பா பெயர் பெரியபாண்டி. என் உடன்பிறந்தவர்கள் மொத்தம் என்னையும் சேர்த்து 5 பேர் என்றால் சரிதான். ராசாத்தி என்பவர் என் உடன்பிறந்த அக்கா. நதியா என்பவர் என் அக்கா ராசாத்தியின் மகள். நான் கூலி வேலை செய்து வருகிறேன். 1ம் பிரதிவாதி மூர்த்தி கட்டிட வேலை செய்பவர் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி ஈஸ்வரி சித்தாள் வேலை செய்பவர் என்றால் சரியல்ல, கூலி வேலை செய்பவர். நான் பிரதிவாதிகளிடம் 2017ம் ஆண்டு, தேதி, மாதம் நினைவில்லை, 500ரூபாய் தாள் 100 ரூபாய் தாள்களாக 2 லட்சம் ரூபாய் ரொக்கமாக கொடுத்தேன். குலமங்களத்தில் உள்ள என்னுடைய வீட்டில் வைத்து பிரதிவாதிகள் இருவருமே வாங்கிகொண்டார்கள். எங்களுக்குள் வட்டி நேரடியாக பேசி கொள்ளப்படவில்லை. வட்டி 1-1/2 வட்டி என்று பத்திரத்தில் கண்டுள்ளது. அடமானம் 2 லட்சம் ரூபாய்க்கு ரொக்கமாக கொடுத்தது தவறு என்றும் அவ்வளவு தொகை நான் பிரதிவாதிகளுக்கு கொடுக்கவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. (எனக்கு வழக்கு வாபஸ் வாங்கணும், வழக்கை தள்ளுபடி செய்யணும், குடுத்த பணத்தை அப்படியே கோர்ட்டிலேயே இருக்க வேண்டும் பத்திரம் அப்படியே இருக்கட்டும் நான் பார்த்துக்கிறேன். )

மறுவிசாரணை :இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.01.21 21:58:12 +0530

Sub Judge

Melur